சேலம் மாநகராட்சி - முனைப்பிரிவு அனுமதி
ச.க.எண்: 2311/2025/கு1 - நாள்: 1.8.2025 ன் படி
நிபந்தனைகளுக்கு உட்பட்டு முனைப்பிரிவு அனுமதி
வழங்கப்படுகிறது.

ஆணையருக்காக,
சேலம் மாநகராட்சி

SCMC

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) சேலம் மாவட்டம்
சேலம் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி
சேலம் மாநகராட்சி – சிவதாபுரம் கிராமம்

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், சேலம் மாநகராட்சி மற்றும் சிவதாபுரம் கிராமம், வார்டு எண்.S, ப்ளாக் எண்.04, நகரளவை எண். 7/2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டப்பகுதி)

கோப்பு எண் : SLM / S50LCLLM /38948/2024
இணையதள விண்ணப்ப எண்: S50LCLLM
அளவு : 1 :400 (1 செ.மீ = 4மீ)
அனைத்து அளவுகளும் மீட்டரில் உள்ளது

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு	: 1.158 ஏக்கர் (அ) 4688.50 ச.மீ
கோரிய மனைகள்	: 25
ஒதுக்கிய மனைகள்	: 25
மனைப்பிரிவின் எல்லை	
நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை	

பொது ஒதுக்கீடுகள்
(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I. மனைப்பிரிவு சாலை பரப்பு (மூலைமுடக்கு உட்பட) : 1197.35 ச.மீ

அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம்(ம)குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019-ன் படி 349.11 ச.மீ பூங்கா ஒதுக்கீடு இடத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி தொகையினை அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

II. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக1%)

A) LOCALBODY –க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4688.50 – 1197.35) x 0.5% = 17.46 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 37.17 ச.மீ (1.06%)

B) TANGEDCO –க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4688.50 – 1197.35) x 0.5% = 17.46 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 42.90 ச.மீ (1.22%)


மூலை முடக்கு :
12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ –ம் விடப்படல் வேண்டும் .
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ –ம் விடப்படல் வேண்டும் .

கட்டிட வரம்பு
9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ –க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :
1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA–1) நாள் .04.02.2019 மற்றும்அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA–1) நாள் .31.01.2020–ன் படி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் .
2. அரசாணை எண் : 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைநாள் .09.12.2020 மற்றும்அரசாணை எண் .141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .16.07.2022–ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள் , மழைநீர் வடிகால் வசதி , மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியவை மாநகராட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .
3. இம்மனைப்பிரிவிற்கு நகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் , எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் மாநகராட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும் .
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .
5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .
6. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்து ஆவணங்களில் (கிரையப்பத்திரம் , குத்தகை பத்திரம் , பட்டா, தானப்பத்திரம் , பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று சரிபார்க்கப்படுகிறது . சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் . மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் முடித்துக்கொள்ளலாம் . இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல .
7. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும் .
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றும் விடுதலின்றி நுழைவாயிலில் 0.6 x 1.2மீ அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரதரிக்கப்பட வேண்டும் .
9. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லத்தக்கது அல்ல .
10. இம்மனைப்பிரிவிற்கு அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும் .
11. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைபிரிவு சாலைகளின் தரம் குறித்துமாநகராட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

PLANNING PERMISSION NO.14/2025
APPROVAL NO: SWP/DTCP/SALEM/LAYOUT NO: 38/2025

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
சேலம் மாவட்டம் .



Signature valid
Signed by: Assistant Director
Location: Salem
Date: 2025.08.01 11:06:25 IST

பா.கிருபா
அளவர் / உதவி வரைவாளர்

பி.ஹரிஹர சுதன்
திட்ட உதவியாளர்